**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Domestic Life Virtues Expounded in Tolkappiyam

**Dr. R. Vanithamani***,
Assistant Professor, Department of Tamil, Queen's College of Arts and Science for Women,
Affiliated to Bharathidasan University, Punalkulam, Pudukkottai.
*Correspondence: vanithamanichandrabose@gmail.com. Tel: 9597007538.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 25-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Just as a mother is profoundly important to every individual, the mother tongue is equally cherished with utmost significance. In this regard, Tolkappiyam is the most ancient among the grammatical texts available to us in Tamil today. While all world languages have formulated their own grammars, Tolkappiyam brings unparalleled prestige to the Tamil language. It is a classical, ancient text that elucidates the culture of the Tamil language, the antiquity of Tamil literature, and the excellence of its civilization.

Generally, in the present era where readers who appreciate grammatical texts are becoming scarce, the reason many still seek out Tolkappiyam is that, although it is a great grammatical treatise, it does not stop at prescribing rules merely for letters (orthography) and words (morphology). Rather, it also establishes the grammar for literature rooted in the lifestyle of the Tamils. Beyond formulating a comprehensive grammar for the entirety of the Tamil language, Tolkappiyam also reveals the Agam (inner life/love) and Puram (outer life/valor and society) of the people of its time. Tolkappiyar naturally and authentically documented the exact lives of his contemporaries within his grammatical framework. Furthermore, he beautifully captured their lifestyles, presenting them as a picturesque grammatical masterpiece. Moreover, a country's inscriptions, copper plates, architectural structures, coins, and its ancient literature serve as vital tools to understand the ancient history, lifestyle, and civilization of its people. Born from the ancient clan that "originated even before stones and soil appeared," the literary treasure for discovering the history of the Tamils is Tolkappiyam—a foundational text that shines as an eternal guiding lamp for our classical Tamil language. The rare Tamil elements found within it serve as essential aids in articulating the magnificent civilizational history of the people. Accordingly, the primary objective of this research is to analyze the domestic virtues (Illaravolukkam) as indicated in Tolkappiyam.

***KEYWORDS:*** *Tolkappiyam, Domestic Life (Illaram), Joyful Abundance (Malivu), Union (Punarchi).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# தொல்காப்பியம் உணர்த்தும் இல்லறவொழுக்கம்

*முனைவர் இர.வனிதாமணி, உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை குயின்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது), புனல்குளம் புதுக்கோட்டை.
கைபேசி : 9597007538, மின்னஞ்சல்: vanithamanichandrabose@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஒவ்வொரு மனிதனுக்கும், தன் தாய் எவ்வளவு முக்கியமோ, அதுபோல, தாய்மொழியும் மிகவும் முக்கியமாக போற்றப்படுகின்றன. அவ்வகையிலே, நம் தமிழில் இன்று நமக்கு கிடைத்துள்ள இலக்கணங்களில் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். உலக மொழிகள் அனைத்தும் இலக்கணம் வகுத்தபோதும், தொல்காப்பியம் தமிழ்மொழிக்கு மிகவும் உயரிய பெருமையை தருகின்றன. தொல்காப்பியம் தமிழ் மொழியின் பண்பாட்டையும் தமிழிலக்கியத் தொன்மையையும் நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம்பெரும் நூல் ஆகும். பொதுவாக, இலக்கண நூல்களை விரும்புவோர் அருகி வரும் இக்காலத்திலும், தொல்காப்பியத்தைப் பலர் நாடக் காரணம், அப்பெருநூல் இலக்கண நூலே ஆயினும், எழுத்திற்கும், சொல்லிற்கும், மட்டும் இலக்கணம் உரைப்பதோடு நில்லாமல், தமிழர் வாழ்க்கையை ஒட்டி அமைந்த இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூலாக இருத்தலே காரணம் ஆகும். தொல்காப்பியம் தமிழ்மொழி முழுமைக்கும் இலக்கணம் வகுத்திருப்பதோடு, அக்கால மக்களின் அகம், புறம், சார்ந்த வாழ்க்கையையும் வெளிப்படுத்தியுள்ளது. தொல்காப்பியர் தம் காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை அப்படியே தம் இலக்கணத்தில் இயல்பாகப் பதிவு செய்துள்ளார். மேலும், தொல்காப்பியர் வாழ்க்கை முறைகளை மிகவும் அழகாக படம் பிடித்து காட்டி இலக்கண எழுத்தோவியமாக காட்டியுள்ளார். மேலும், ஒரு நாட்டு மக்களின் பண்டைய வரலாற்றினையும், வாழ்க்கை முறையையும், நாகரீகத்தையும், உணர்த்துவதற்கு அந்நாட்டில் காணப்பெறும் கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், கட்டவகைகள், நாணயங்கள், அந்நாட்டில் வழங்கும் பண்டைய இலக்கியங்கள், முதலியவைகள் கருவிகளாக அமைகின்றன. “கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியில்பிறந்து தமிழரின் வரலாற்றினை அறிவதற்கு இலக்கியக் கருவூலமாக இருப்பது நம் செந்தமிழ் மொழிக்கு நந்தாமணி விளக்கமாய் திகழும் தொல்காப்பியம் என்னும் முழுமுதல் நூலாகும். இதில் காணப்பெறும் பல அருந்தமிழ் மக்களின் பெருந்திரு நாகரீக வரலாற்றினை எடுத்து இயம்புவதற்கு உறுதுணையாக அமைகின்றன. இவ்வகையிலே தொல்காப்பியம் சுட்டும் இல்லறவொழுக்கம் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகின்றன.

**திறவுச்சொற்கள்**

தொல்காப்பியம், இல்லறம், மலிவு, புணர்ச்சி, ஆகியவை ஆகும்.

**முன்னுரை**

வாழ்க்கை முறையானது மிகவும் அழகானதும், ஆழமானதும் ஆகின்றன. உலகப் பாரம்பரியத்திலேயே நம் தமிழ்ச் சமுதாயப் பாரம்பரியம் மிகவும் உயரிய இடத்தில் வைத்து போற்றப்படுகின்றன. அவ்வகையிலே, தொல்காப்பியத்தில் கூறப்பெறும் செய்திகள் யாவும் பழைய உலக வழக்கை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பெறுகின்றன. மக்கள் வாழ்க்கையில் இயல்பாகக் காணப்பெறும் ஒழுக்கம், உலக வழக்கு என்றும், அவ்வுலக வழக்கில் சிறந்தனவற்றை தேர்ந்தெடுத்து, பிற்கால மக்களின் உலக வழக்குச் சிறப்பாக நடைபெறுதற் பொருட்டுப் புலவர்களால் புனைந்து செய்யப்பெறுவது “நாடகவழக்கு“என்றும் வழங்கப்பெறும். இந்த இருவகை வழக்குகளும் கலந்தே “செய்யுள் வழக்கம்” ஆகின. தொல்காப்பியம் பண்டைத் தமிழரின்ன் வாழ்க்கையினை அழகுற எடுத்துக்காட்டும் ஓர் ஒப்பற்ற விழுமிய நூல்என்பதை அறிய முடிகிறது. மேலும், இத்தகைய சிறப்புடைய நூலில் இருந்து காணப்பெறும் சில குறிப்புகளைக் கொண்டு தொல்காப்பியம் சுட்டும் இல்லறவொழுக்கம் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகின்றன காணலாம்.

**இல்லறம்**

தலைவனும், தலைவியும் பல்லோர் அறிய திருமணம் புரிந்துக் கொண்டு,வாழ்க்கை நடத்துதலே இல்லறவொழுக்கம் என்று ஆன்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆசிரியர் தொல்காப்பியர் கற்பு, அல்லது இல்லறவொழுக்கத்தை,

**மறை வெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுத லாகிய இயல்நெறி பிழையாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே**[1]

என்று குறிப்பர். களவு வெளிப்பட்ட பின் தமர்க் கொடுக்கக் கொள்ளும் மணவினை நிறைவேறியப் பின் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு, ஆகிய ஐந்துக் கூறுகளும் அடங்கிய பகுதியே கற்பென வழங்கப்பெறுகிறது. கற்பு என்பது தான் இல்லறவொழுக்கமாகும். தொல்காப்பியத்தில் கற்பு என்று வரும் இடங்களையெல்லாம் ஆராயின் அது இல்லறம்[2] என்ற பொருளையே குறிப்பதை அறிய முடிகிறது. கற்பு என்பதற்கு மகளிர்க் மாந்தர் மாட்டும் நிகழும் “மன நிகழ்ச்சி“ என்றும், தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள் என்றும்[3] கூறுகின்றனர். மேலும், தொல்காப்பியர் இல்லறவொழுக்கத்ததில் கூறும் பகுதிகளை ஆராய்வதே இவ்வாய்வாகும்.

**மலிவு**

மலிவு என்பது இல்லறவொழுக்கமாகும்.புணர்ச்சியால் மகிழ்தல்.அதாவது களவு முற்றி மணந்துக் கொண்ட காதலர் மனக்குறை தீரக் கூடி கலந்து இன்புற்று வாழ்தல் ஆகும். மலிவு – மகிழ்ச்சி.

இம்மலிவுக் காலத்தே தலைவனும், தலைவியும், களவுக் காலத்தே நிகழ்ந்தவற்றை ஒருவர் மற்றவரோடு கூடி இன்புறுவர்.இப்பகுதியில் நிகழும் செய்திகளைத் தொல்காப்பியர் “கரணத்தின் அமைத்து முடிந்தகாலை“ என்ற கற்பியல் நூற்பாவிலும்[4] “அவனறிவாற்ற அறிவும்“ என்ற கற்பியல் நூற்பாவிலும்[5] தொகுத்துக் கூறியுள்ளார்.இற்த நூற்பாக்களின் வழியே தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே கூற்றுக்கள் நிகழும் இடத்தைக் காண முடிகிறது. இவற்றில் காணும் செய்திகள் தொல்காப்பியர் காலத்து வழங்கிய இல்லற முறைகளை விளக்குகின்றன. அவற்றுள்,

**கரணத்தின் அமைந்து முடிந்த காலை**

**நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி**[6]

என்பது ஒன்றாகும்

தமிழர் மணமுறையில் நிகழ்தற்குரிய கரணங்கள் இவையென்பது தம் காலத்தில் வாழ்ந்த எல்லோருக்கும் நன்கு தெரியுமாதலின் அவற்றை தொல்காப்பியர் தம் நூலில் விவரித்துக் கூறவில்லை. ஆயினும் தொன்றுத் தொட்டுத் தமிழர்கள் பின்பற்றிய திருமணச் சடங்குகள் சிலவற்றை ஒருவாறு உணர முடிகிறது. இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் “வேள்வியாசான் காட்டிய முறையே அங்கி சான்றாக நிகழும் சடங்குமமுறை தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் காணப்படவில்லை. ஆகவே ஆசிரியர் மேற்க்கொண்ட திருமண முறைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டுஎன்பது அறிதற்பாலது. இதனை,

**ஒத்துடை யந்தணன் எரிவலஞ் செய்வான்போல்**[7]

என்ற கலித்தொகை சொற்றொடராலும் உறுதிப்படுத்தலாம்.இதில் புரிநூல் அந்தணராகிய வேதியரது வேய்விச் சடங்கு உவமையாக எடுத்துரைக்கப் பெறுகிறது. கரணத்தின் அமைந்து முடிந்தக் காலை என்பதற்கு ஆசான் புணர்ந்நத கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்று கூறுவர்.மேலும் தமிழர் முறைப்படி நடைப்பெற்ற வதுவை மணத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி**

தலைவியைத் தலைவன் கண்ணுற்ற ஞான்று தலைவனிடம் உள்ள பெருமையும். உரனும் தலைவியிடம் உள்ள அச்சமும், நாணமும், மடனும் ஏதுவாக இயற்கைப் புணர்ச்சி இடையீடுபட்டுழி வேட்கை தணியாது வரைந்தெய்துங்காறும் இருவர்மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டுவிடப் அபெறுதல். இயற்கை புணர்ச்சி புணர்ந்நத தலைவன் அலரறிவுறுத்தப்பட்டு நீங்கி வரைந்து புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கை தோற்றாமல் தளைக்கப்பட்டதனைத் “தளை“ என்றும் கூறலாம்.”உழுந்தலைப் பெய்த ” என்ற அகப்பாட்டில்,

**முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப**

**அஞ்சினள் உயிர்த்த காலை**[8]

என்பதால் இயற்கை புணர்ச்சி யின்மையும்,

**அகமலி உவகையுள் ஆகி முகன் இருத்து**
**ஓய்யென இறைஞ்சி**[9]

என்பதால் உள்ளப்புணர்ச்சி யுண்மையும் அறியலாம். களவொழுக்கப் புணர்ச்சி போல் மனத்தில் அச்சமின்றி செயலில் விரைவின்றி நிகழும் கற்புப் புணர்ச்சியை அடியிற் காணும் குறுந்தொகைப் பாடலில் காண முடிகிறது.

**விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்**
**அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்**
**இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே**
**பூப்போல் உண்கன் பொன்போல் மேனி**
**மாண்வரி படூஉம் வைகலோ டெமக்கே**[10]

இப்பாடலில் தலைவியுடன் இன்புற்று இல்லறம் நடத்தும் தலைவன், அத்தலைவியியனால் வரும் இன்பம் எப்பொருளினும் சிறப்புடையதென்று தோழி முதலியோர் அறியும் கூறுவதாக வந்துள்ளதைக் காண முடிகிறது. இது நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சியாகும்.

**அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்**
**சொல்லுறு பொருள்**[11]

என்பது இரண்டு.

தலைவி தன் துன்பந்தீர ஆர்வமொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மை என்று இதற்கு பொருள் கூறுவர் இளம்பூரணர் .இஃதாவது களவுக்காலத்தில் வருந்திய வருத்தம் தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லும் பொருள் இதுவாகிறது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சத் தாங்கலந் தனவே[12]

களவுக்காலத்து வருந்திய வருத்தம் தீரத் தன் காதல் மிகுதி தோன்ற இனி தம்மிடையே பிரிவு நேராது என்று தலைவன் புலப்படுத்தித் தலைவியின் அச்சத்தை நீக்கியதைக் காண முடிகிறது. நெஞ்சம் தம்மிற் கலந்ததனால் இப்புணர்ச்சி தெய்வத்தானாயிற்று எனத் தலைவன் தெருட்டியதும் உணரத்தக்கது.

சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுல்[13]

என்பது மூன்று.

வேம்பின் பைங்காய்என் தோழி தரினே

தேம்பூங் கட்டி என்றனிர்[14]

இஃது ஊடியிருந்த தலைவியின் உடன்பாடு டிபறுவதற்குத் துணைபுரியும் வண்ணம் தலைவன் தோழியை வேண்டிய பொழுது அவள் கூறியது. இவ்வாறு தலைவனும், தலைவியும் இல்லறம் நடத்தும் திறத்தை அவர் மனைக்குச் சென்று செவிலி நற்றாய்க்குக் கூறுகின்றாள்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமாழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே**[15]

தலைவி சமைத்த புளிக்குழம்பைத் தலைவன் இன்தென்று கூறி உண்கின்றான். தலைவி அகம் மகிழ்கின்றாள். இந்த மகிழ்ச்சியை அவளது முகம் காட்டுகின்றது. இயல்பாகவே பொலிவு பெற்ற நுதல் மகிழ்ச்சியால் பின்னும் பொலிவு பெறுகின்றது. அம்மகிழ்ச்சியை மிகுதியாக வெளிப்படுத்தாமல் "நுண்ணிதின்" மகிழ்கின்றாள்.

**அந்தணர் திறத்தம்சான்றோர் தேஎத்தும்**
**அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்**
**ஒழுக்கம் காட்டிய குறிப்பு**[16]

என்பது நான்னு.

துறவியர், பெரியோர், பெற்றோர், சுற்றம் முதலியோரிடம் இன்ன இன்னவாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தலைவன் தலைவிக்குக் கூறுவதுதான் இது.குடும்பத் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அவள், அக்குடும்பத் தொடர்புடையோர் இயல் பறிந்து கொள்ளுதல் இன்றியமையாததன்றோ? இத்துணை நுட்பமாக ஒழுகிய பண்டையோரின் இல்லற வாழ்க்கை வியந்து போற்றற்குரியது.

**அந்தரத் தெழுதிய எழுத்தின் மான**
**வந்த குற்றம் வழிகெட ஒழுகல்**[17]

என்பது ஐந்து.

"களவுக்காலத்தில் ஒழுகிய ஒழுக்கக் குறைபாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்து எழுதிய எழுத்து அழிவது போல் அழியும்படி பிராயச்சித்தம் செய்து ஒழுகல்" என்பது இதன் பொருள். களவுக்காலத்து உண்டாய பாவமாவது – தீண்டத்தகாத நாட்களிலும் தீய இராசி நாள்களிலும் தலைவன் தலைவியைக் கூடியது முதலியன. இதனைத் தொல்காப்பியரே,

**மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை**[18]

என்று கூறியதனால் உரையாசிரியர்களது குறிப்புக்களாலும் அறியலாம்.

**நோன்மையும் பெருமையும் மெய்கொள் அருளிப்**

**பன்னல் சான்ற வாயிலொடு பொருத்தித்**

**தன்னி னாகிய தகுதி[19]**

என்பது ஆறு

தலைவனால் உளதாகிய பொறையையும், கல்வி முதலிய பெருமையும் உடைய மகவைத் தலைவி தன் வயிற்றகத்தே கொண்டிருப்பதனால், ஆராய்ச்சி மிக்க அந்தணரோடு கூடிச் செய்யத்தகும் சடங்குகளைச் செய்யும் தகுதியைக் குறிக்கிறது இது. தன்னியாகிய மெய் – கருப்பம். இதனால் தொல்காப்பியனார் காலத்தே தமிழர்கள் குழந்தை பிறந்ததும் சில சடங்குமுறைகளை மேற்க்கொண்டனர் என்பது பெறப்படுகிறது. தலைவி கருப்ப முற்றால் சுற்றம் முதலியோர்க்கு விருதஸ்ரீந்திட்டு மகிழும் வழக்கம் இன்று போல் அன்றும் இருந்து வந்ததை அறிய முடிகிறது.

**ஆற்றல் சான்ற தாமே யன்றியும்**

**தோற்றோர் மன்றநங் கேளிரவர் தகைமை**

**வட்டிகைப் படூஉம் திட்டம் ஏய்ப்ப**

**அரிமயிர் ஒழுகுநின் அவ்வயி றருளி**

**மறைநவில் ஒழுக்கம் செய்தும் என்றர்**

**துளிதீர் கிளவிநந் தவத்தினும்**

**நளிவாய்த் தனவால் முனிவர்தம் சொல்லே[20]**

இதில் நம் தலைவரேயன்றிச் சுற்றத்தாரும் நோற்று ஒரு கருப்பம் தங்கிய நினது வயிற்றைக் கண்டு உவந்தெனவும், அதற்கேற்ற சடங்கு செய்து மென்றார் எனவும்,முற்காலத்மு நாம் கேட்ப நமக்குக் கூறிய முனிவர் சொல்லும் உண்மை யாயிற்றெனவும் கூறியவாறு காண முடிகிறது. இது தோழிக் கூற்றாக அமைகிறது.

**புதல்வர் பயந்த புனிறுசேர் பொழுதி**

**நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி**

**ஐயர் பாங்கினும் அமரர் சுட்டினும்**

**செய்பெருங்ஞ் சிறப்பொடு சேர்தல்[21]**

என்பது ஏழு.

சிறப்பெய்தி மகப்பேறு பெற்று ஈன்றணிமை சேர்ந்நத காலத்தில் எண்ணெய் ஆடும் தலைவியை முகமன் கூறுவதற்கு முனிவர் மாட்டும் தேவர்கள் புதல்வனைப் பாதுகாத்தற் பொருட்டும் செய்யும் பெரிய சிறப்புகளைக் குறிக்கிறது இப்பகுதி. அப்பொழுது செய்யப் பெறும் சிறப்புக்களாவன, பிறந்த புதல்வன்

முகம் காண்டல், ஐம்படை புட்டுதல், பெயரிடுதல் முதலியன.குழந்தை பிறந்தப் பின் தாய் எண்ணெய் நீராட்டல், பாட்டன் பாட்டியார் குழந்தைக்குப் பெயரிடுதல், இரவலருக்குப் பரிசில் வழங்கல், குழந்தையைக் காக்க என்று இல்லுறை தெய்வ வழிபாடு செய்தல் முதலியவை இக்காலத்திலிருப்பதைப் போலவே அன்றும் இருந்தமை இதனால் அறிய முடிகிறது. ,த்தகைய மலிவு பற்றிய பல செய்திகள் தொல்காப்பியத்தில் காணப் பெறுகின்றன.

இரண்டாவது. புலவி, ஊடல், உணர்வு, இவை மூன்றும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத பொருள்களாகும். இவற்றுள், "புலவி அண்மைக்காலத்து, ஊடல் அதனின் மிக்கது" என்பர் இளம்புரணர்[22] உணர்தல் என்பதை ஊடலை அளவறிந்து நீங்குதல் என்று குறிப்பர் பரிமேலழகர்[23] கற்பில் இவையே சிறந்த பகுதியாகும். உளவியல் நுட்பமும் அசறிந்த பகுதியுமாகும். காதலர்களின் உள்ளக்கிடக்கினை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது இப்பகுதி. தலைவன் தலைவியர்க்கிடையே நிலவும் அன்பு எத்தகையது என்பதைக் காட்டவே நமது முன்னையோர் இப்பகுதியை அவ்வளவு மிகைப்படக் கூறியுள்ளனர்.

**துளியும் புலவியும் இல்லாயிற் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று[24]**

என்று கூறுவர் வள்ளுவப்பெருந்தகை. துனி, என்பது முதிர்ந்த காலம். புலவி என்பது, பழத்திற்கும் இளங்காய்க்கும் முறையே உவமைகளாயின. மேலும் அவர், காமத்துப்பாலில் தலைவன் வேறு மகளிரைக் கலந்தானாகக் கருதித் தலைவி ஊடியதாகக் கூறும் குறள்கள் யாவும், அவன் மாட்டு அச்செயல் நிகழ்ந்ததோ என்ற ஐயத்தால் தலைவி கருதிச் சொல்லியனவேயன்றி, பிற நூல்கள் போல், உண்மையில் நிகழ்ந்ததாகக் கொண்டு தலைவனை இழித்துக் கூறும் கருத்துடையன ஆகாமை உய்த்துணரத்தக்கது. வள்ளுவர் பெருமானும் இக்கருத்தினை,

**இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்**
**வல்ல தவரளிக்கு மாறு[25]**

என்பதாகும். இவ்வாறு பெரியார் தாம் கூறக்கருதிய காமப் பகுதியை எல்லா நாட்டவரும் ஏற்குமாறு தூய்மைப்படுத்திக் கூறியிருப்பதை எண்ணி மகிழ்கிறோம்.

இனி, தொல்காப்பியர் தலைவி மாட்டு நிகழும் புலவி ஊடல் உணர்வுகளைப் பற்றிக் கூறுவதைக் காணலாம். தலைவன், தலைவியர்க்குள் புலவி முதலிய நிகழுங்காலத்தில் அவ்விருவர்பாலும் வாயில்களாக நின்று பேசுவதற்குரியார் பன்னிருவர் ஆவார்.அவர் தோழி, செவிலித்தாய், பார்ப்பான், பாங்ன், பாணன், பாடினி, ஏவலபளர், விருந்தினர், கூத்தன், விறலி, அறிவர், கண்டோர் ஆகியோர் இவர்களைத் துறவுக் காலத்துக்குரிய தூதுவராகக் கூறுவர் நச்சினார்க்கினியர்.[26] அங்ஙனம் கூறியிருப்பதால் யாதொரு சிறப்பும் இல்லை என்பதை ஊன்றி நோக்கினால் உணரலாம்.இந்த

வாயில்களோடு தலைவனது ஆற்றாமை தன்னையும் அவன் புதல்வனையும் சேர்த்துக் கூறலும் உண்டு.[27] வாயில்கள் கூற்று நிகழ்த்துவதில் சில வரையறைகள் உள்ளன.nபரும்பாலும் வாயில்கள் தலைவன், தலைவியரிருவரும் மனமகிழச் நிகழ்த்துதலையே நோக்கமுடையவராயிருப்பர்.

**எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்**

**புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப[28]**

என்பது தொல்காப்பியரின் விதி. இவர்கள் தலைவன்பால் குறை வேண்டும் பொழுது அவனை நேராகச் சுட்டி கூறாது பிறரைக் கூறுவது போலக் கூறுவர். அஃதாவது, படர்க்கையால் ஒருவனைப் பற்றிப் பேசுவதைப் போலக் கூறுவர். அங்ஙனம் கூறுதல் "முன்னிலைப் புறமொழி" என வழங்கப்பெறும்.

**உண் கடன் வழிமொழித் திரங்குங்கால் முகனுந்தாம்**

**கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே**

**றாகுதல் பண்டுமிவ் வுலகத் தியற்கை[29]**

என்ற கலிப்பாட்டடிகளில் தோழியின் கூற்று முன்னிலைப் புறமொழியாக அமைந்துள்ளதைக் காணலாம். கடன் வாங்குவோர் இரந்து வாங்கும்பொழுது கொண்டிருக்கும் முகமும் அதனைத் திருப்பிக் கொடுங்குங்கால் கொள்ளும் முகமும் வேறுபடுவது உலகத்தியற்கை என்பது இதன் பொருள். முன்னைர் வேட்கையுடைய நீ வேட்கைப் பருவத்தாளய தலைவியை இரந்து அவளது நலத்தினை நுகர்ந்து உன் வேட்கையைத் தீர்த்துக் கொண்டாய்.உன் வேட்கையைத் தணித்தவள் பன்னர் வேட்கைப் பருவத்தாளயவிடத்து உன்னை இரக்கும் பொழுது நீ சிறிதும் இரங்கலை என்ற கருத்துடன் தோழியின் பேச்சு தலைமகனை நோக்கியவாறு காண முடிகிறது. இன்று சாடைபேசுதல் என்று இது வழங்குகின்றது. எந்நிலையிலும் வாயில்கள், தலைவி முன்னர்த் தலைவனை இழித்துரையார்.

**மனைவி தலைநாட் கிழவோன் கொடுமை**

**தம்முள வாதல் வாயில்கட் கில்லை[30]**

என்கிறது தொல்காப்பியம். தலைவன் தலைவியர் அன்பில்லாக் கொடுஞ்சொற்களைக் கூறுமிடத்து அவ்விருவர் முன் நில்லாது ஒன்றன் மேல் வைத்துச் சிறைப்புறத்தாராகக் கூறுவர்.

**அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்**

**சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்[31]**

என்பது தொல்காப்பியரின் விதி. இந்தப் புலவியும் ஊடலும் தலைவற்கு உண்டேனும், தலைவன் பரத்தமையால் தலைவிடமாட்டே நிகழ்வதாகக் கூறுதல் புலநெறி வழக்கமாகும். தலைவிபால் வேறுபாடு உண்டாகும்பொழுது தலைவன் அவன் சினத்தைத் தணிவித்தற் பொருட்டு நெருங்கி வந்து பணிதல் உண்டு.

**காமக் கடப்பினுள் பணிந்த கிளவி**

**காணுங் காலைக் கிழவோற் குரித்தே**

**வழிபடு கிழமை யவட்கிய லான[32]**

என்பது ஆசிரியர் இதற்கு கூறும் விதியாகும். தலைவியும் தன் உள்ளத்தில் நிகழும் அன்பினை மறைத்துக் கொண்டு, வேறு பொருள் பயக்கும் சொற்களால் தன் பணிவை அவனுக்குக் காட்டுவாள்.

**அருள்முந் துறந்த அன்புமொழி கிளவி**

**பொருள்படக் மொழிதல் கிழவோட்கும் உரித்தே[33]**

என்ற தொல்காப்பியரின் விதியால் அறியலாம்.புலவிக் காலத்தில் இவ்வாறு மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நிகழ்தல் முறையாகும்.

**மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்**

**நினையுங் காலைப் புலவியுள் உரிய[34]**

என்பது தொல்காப்பியரின் விதி. ஏன்? அவளும் தலைவி தானே! இன்றும் இம்முறை நடைமுறையில் உள்ளதை நாம் நன்கு அறிய முடிகிறது. இதனை ஆசிரியர் மற்றோர் இடத்தில்,

**கொடுமை யொழுக்கம் கோடல் வேண்டி**

**அடிமேல் வீழ்ந்த கிழவன்[35]**

என்று குறிப்பிடுவர். அக வாழ்வில் தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் புகழ்ந்து கோடலும் உண்டு.

**நிகழ்ந்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்**

**புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே[36]**

என்பது இதற்கு உரிய விதியாகும். இத்தகைய மனைவி உயர்வும் கழவோன் பணிவும் கலித்தொகையில் (128 ஆம் பாடல்) தலைவி கூற்றாக மிக அழகாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளதை நாம் படித்து இன்புறலாம். புலவியும் ஊடலும் பெரும்பாலும் தலைவிக்குரியவேனும் சில சமயம் தலைவனிடமும் நிகழ்தல் உண்டு.

**உணர்ப்பவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**

**புலத்தலும் ஊடலும் கிழவோர்க் குரிய[37]**

தலைவி ஊடியவழி தலைவன் தேற்றத் தலைவி தேறும் எல்லையை இகந்தனளாயினும் அல்ல, குறிப்பிட்டதன் காரணமாகத் தலைவி வாராமை குறித்தும் தலைவனிடம் ஊடல் நிகழும் என்பர் ஆசிரியர். இறையனார் களவியல் ஆசிரியர் முன்னதை “உணர்ப்புவயின் வாரா ஊடல்“எனக் குறிப்பிடுவர்.[38] இச்சமயத்தில் தோழி தலைவனை நெருங்கிப் பிணக்கினைத் தீர்க்க முயலுவாள்

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**

**புலந்தாரைப் புல்லா விடல்[39]**

என்பது தலைவி குறிப்பினால் தோழி கூற்று வந்ததைக் காண முடிகிறது. இவ்வாறு தோழி கூறுதலன்றி தலைவியும் கூறப் பெறுவாள். இதனை நச்சினார்க்கினியர் பாடாண் திணைக் கைக்கிளையில் அடக்குவர்.

**யானுடந் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்**
**தானுட யானுணர்த்தத் தானுணராள் தேனூறும்**
**கொய்தார் வழுதிக் குளிர்சாந் தணியகலம்**
**எய்தா திராக்கழிந்த வாறு[40]**

என்ற முத்தொள்ளாயிரப் பாடலால் அறியலாம். சில சமயம் தலைவனிடம் தோழி பணிமொழியும் கூறுவள். கடுமொழியும் கூறுவள்.

**பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழவி**
**மடத்தகு கிழமை உடைமை யானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள்[41]**

என்ற விதியால் அறியலாம். தோழி அன்பிலை, கொடியை என்று கடிந்து கூறியதைக் கேட்ட தலைவன் சினங்கொண்டானோ என ஐயுற்ற தலைவி, தலைவனது குறிப்பையறிவதற்கும் தான் கொண்ட துனி தலைவற்கு என்னாகுமோ என அஞ்சியும், நான் இறந்துப்பட்டாலும் சரி, அவரை அவ்வாறு கூறாதே என அயன்மையுடைய மொழியால் கூறுவாள்.

**அவன் குறிப்பறிதல் வேண்டீயுங் கிளவி**
**அகன்மலி யுடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே[42]**

என்று ஆசிரியர் இதற்கு விதி செய்வர்.

**நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்**
**கனையும் அத்தனும் அல்லரோ தோழி**
**புலவியஃதெவனோ அன்பிலங் கடையே[43]**

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவி, அவரை அன்பிலை கொடியை என்னாதி. அன்பில் வழி நின் புலவி அவரை என் செய்யும்? அவர் நமக்கு இன்றியமையாத எமரல்லரோவென இருவகையாலும் தோழிக்க அயன்மை கூறியவாறு அமைகின்றது. தலைவியின் அப் பண்புரையைக் கேட்ட தலைவன், தலைவி, ஊடல் தணிந்து கூட விரும்புகிறாள் என்பதை உணர்ந்து ஊடல் தணிவான்.

ஒரோவழி அவ்விருவரும் தங்கள் ஊடல் நீங்காது பிணங்கியே நிற்பாராயின், அறிவர் என்போர் முன்வந்து அவ்விருவர் வாழிக்கையினும் தமக்குள்ள வருத்தத் கழறியுரைப்பர். இவ்வாறு இடித்துரைக்கும் அவராணையை அவ்விருவரும் ஒருபோதும் கடவார்.

**இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்**
**கிழவனும் கிழத்தியும் அவாவரை நிற்றலின்[44]**

என்று விதி கூறுவர் தொல்காப்பியர்.

**உடுத்தும் தொடுத்தும் புண்டுஞ் செரீஇயுந்**
**தழையணிப் பலிந்த ஆயமொடு துவன்றி**
**விழவொடு வருதி நீயே இஃதோ**
**ஓரான் வல்சிக் சீரில் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனிவிழ வாயிற் றென்னுமிவ் வுரே[45]**

என்பதில் ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம் என்பது போன்ற கருத்தால் அறிவர் தலைவனைக் கழறியதைக் காண முடிகிறது.

மனைமாட்சி அல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்[46]

இதனைத் தலைவியைக் கழறியதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

பெரும்பாலும் அறம், பொருள், இன்பம் கூறும் அறிவர் கூற்றுக்களில் புறப்பொருள் வரும் பேகன் என்ற வள்ளலும் அவன் மனைவியும் ஊடல் நீட்டித்துப் பெரிதும் பிணங்கி நின்ற போது அவ்விருவரையும் கூட்டுதற்குப் கபிலர் முதலிய அறிஞர் முன்வந்து அவ்வள்ளலுக்கு உறுதி செய்தி புறநானூற்றால் அறியலாகும். சோழன் மனைவி ஊடல் நீட்டித்தவிடத்துப் புகழேந்திப் புலவர் சென்று, ஊடலைத்தீரக் கூறியதையும் இதற்கு எடுத்துக்காட்டாக் கொள்ளலாம்.

புலவி காமச் சிறப்பைப் பயக்கவல்லதாயினும், அது சிற்து நீளினும் அதன் சுவை கைக்கும் என்பதை இல்லறத்தில் ஒழுகுவார் நன்கு அறிவர்.

**உப்புமைந் தற்றால் புலன் அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்[47]**

என்ற வள்ளுவர் கூற்றை அறியலாம். "உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவையன்றானாற்போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பமின்றாம்" என்ற பரிமேலழகர் உரையையும் நாம் எண்ணி மகிழலாம். எனவே, தொல்காப்பியர் இப்புலவியின் இறுதியில் தலைவனை அன்போடும் இடித்துக் கூறி, அவனைத் தலைவிக்கு முறையாகும் என்று கூறுவர்.

**தாய்போல் கழறித் தழீஅக் கோடல்**

**ஆய்மனைக் கிழத்திக்கும் உர்த்தென மொழிப**

**கவவொடு மயங்கிய காலை யான**[48]

என்பது விதி. மிக்க சீற்றத்தினும் தலைவி தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் முறையன்று. என்னும், அவனுடைய காமக் கிழத்தியரிடத்துத் தான் நடந்தொழுகும் மரியாதைப் பற்றியும், தலைவனது பரத்தமை கருதாது தான் கூடியொழுகுதல் பற்றியும் தலைவி குறிப்பால் தன்னை வியந்துக் கொள்ளுதல் கூடும்.

**தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளைத்தல்**

**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை**

**முற்பட வகுத்த இரண்டலங் கடையே**[49]

என்பது தொல்காப்பிய விதி.

தலைவன் பரத்தையிற் பிரிந்து கரந்தொழுகுதல் தன் ஊரின் கண்ணேயல்லது வேற்று நாட்டு ஊர்களில் ஆகாதெனக் கூறும் இறையனார் களவியல்,

**பரத்தையிற் பிரிவெ நிலத்தரி பின்றே**[50]

என்பது விதி.இதில் தலைவன் பரத்தையருடனும் ஏனைய மனைவியருடனும் தன்னூர்க்குப் புறம்பாயுள்ள செய்குன்றமும் வாவஜயும் விளையாட்டிடமும் போன்றவற்றிற்குச் சென்று இன்பநுகர்ச்சி எய்துவான்.

**யாறும் குளனும் காவும் ஆடிப்**

**தியிகந்து நுகர்தல் உரிய என்ப**[51]

என்பது விதி. இதில் “யாறும் குளனும் காவும் ஆடி“என்பதற்கு நச்சினார்க்கினியர் “காவிரியும் தண்பொருநையும் வையையும் போலும் யாறுகளிலும், இருகாமத்திணையேரிபோலும் குளங்களிலும், திருமருதந்துறைக்காவே போலும் காக்களிலும் விளையாடி“ என்று கூறுவர். பட்டினத்தை அடுத்து இரு காமத்திணையேரிகள் இருந்தமை பட்டினப்பாலையாலும்[52] சிலப்பதிகாரத்தாலும்[53] அறிய முடிகிறது. மதுரையில் வையையை அடுத்து திருமருதந்துறை என்னும் உய்யானம் இருந்தமை கலித்தொகையாலும்[54] நாம் அறியலாம். தலைவனின் பரத்தமை யொழுக்கம் ஊரில் அலராய் எழுங்கால் தலைவனை நினைந்து தலைவிக்கும் தலைவியை நினைந்து தலைவனுக்கும் காமம் மிக்கு நிகழும் என்ற கூறுவர் தொல்காப்பியர்.

**அலரில் தோன்றும் காமத்து மிகுதி**[54]

என்பது விதி.

**ஊரவர் கௌவை எருவை அன்னைசொல்**

**நிராக நீளும்இந் நோய்[55]**

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**

**காமம் நுதுப்போம் எனல்[56]**

என்ற குறட்பாக்களை இலக்கியமாகக் கொள்ளலாம்.

பரத்தையற்பரிவு பற்றி இறையனார் களவியலுரையாசிரியர் எழுதுவது அஃதேயெனின் மற்றைப் பிரிவெல்லாம் வேண்டுக ஆள்வினை மிகுதி உடைமையான் இப்பரிவு ஏற்றறிகோ எனில் பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்றால், ஊடலே புலவியே துணியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால், அவை நீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாம். அவ்வின்பத் தன்மையை வெளிப்படுப்பன அலை எனக் கொள்ள வேண்டும். என்பது இப்பரத்தைப் பிரிவு எல்லாக் குலத்தார்க்கும் உரித்து என்பதை,

**காதற் பரத்தை எல்லார்க்கும் உரித்தே[57]**

என்று இறையனார் களவியலும்,

**பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**

**நிலத்திரி பின்ற தென்மனார் புலவர்[58]**

என்று தொல்காப்பியமும் கூறுகின்றன.

தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவி பூப்பெய்தி எய்தினாளாயின் அச்செய்தி அவனுக்கு அறிவிக்கப்பெறும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. இதனை இறையனார் களவியலுரையாசிரியர் கூறும் பொழுது, தலைமகன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைமகனுக்கு பூப்புத் தோன்றிற்று. தோன்றத் தலைமகன் உணரும். எங்ஙனம் உணருமோ எனின், வாயில்கள் ஔணர்த்த உணரும். என்னை வாயில்கள் உணர்த்துமாறு எனின், தலைமகன் வாயில்களும், தலைமகளி மாட்டு உளவாம். தலைமகள் வாயில்களும் தலைமகன் மாட்டு உளவாம். ஆதலின் அவர்கள் ஔணர்த்த உணரும் என்பது[59] இங்ஙனமின்றி, தலைவிக்கு பூப்பு நிகழ்த்த நாளில் சேடி செங்கோலஞ் செய்து, செப்புப் பாலிகையுட் செம்பூவும் நீரும் கொண்டு சென்று, தலைமகனை வலம் வந்து பூவும், நீரும் அவன் அடிமேற் பெய்து போகப் பூப்பு நிகழ்ந்ததென்று தலைமகன் உணரும் என்றும், இம்முறை மேலாயினாரிடங்களில் பூப்பு உணர்த்துமாறென்றுமும் அதே உரையில் கூறுவர். திருக்கோவையாரிலும் இச்செய்தி வருகிறது[60] நம்பியகப் பொருள் இதனை,

**செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி**

**அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்[61]**

என்கிறது. இங்ஙனமே, பரத்தைப் பிரிவில் தலைவிக்குப் புதல்வன் பிறந்த செய்தி அறிவித்தற்கு அவர் வெள்ளணி அணிந்து செல்வது பண்டைய வழக்கமாக இருந்தது.[62] மேற்க்கூறியவாறு, அறிவிக்கப்பெற்ற தலைவியின் பூப்புச் செய்தி கேட்டதும் தலைவன் காலம் தாழ்த்தாமல் சென்று, அது நிகழும் மூன்று

நாளும் அவளை அணுகியிருக்க வேண்டும் ன்றும், நான்கம் நாள் முதல் பன்னிரண்டு நாள் வரை அவளை அவன் கூடியுரைய வேண்டும் என்றும் கூறுவர். இதனை,

பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனாட புலவர்
**பரத்தையிற் பிரிந்த காலையான**[63]

என்ற நூற்பாவால் அறிய முடிகிறது.

இதில், பூப்பின் புறப்பா டீராறு நாளும் என்பதற்குப் பூப்பு நிகழும் மூன்று நாளுக்கும் புறம்பாகிய பன்னிரண்டு நாள் என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். மேலும், அவர், பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத்தங்கில் அது வயிற்றில் அழ்தலும், மூன்றாம் நாள் தங்கில் அது சில்வாழ்க்கைத்தாகலும் பற்றி முந்நாளும்கூட்டமின்றென்றார். இது மகப்பேறு காலத்திற்குரிய நிலைமை கூறிற்று என்று கூறுவர். இக்கருத்து இன்று கருத்தடை பற்றிப் பேசப்பெறும் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கிக் கொள்ளலாம்[64] இயற்கைக் கருத்தடை முறையைக் கண்டறிந்தும், கருப்பெற்றும் வேண்டாதப் போது கருத்தடை செய்தும் வந்தனர் என்பதையறிந்து இன்றைய தமிழர்கள் பெருமிதம் கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக, வாயில்கள் உணர்த்தப்பெற்ற தலைவன் தன் இல்லத்தை அடைந்து தலைவியுடன் கூடிப் இருக்கின்ற காலத்தில் புலவி, ஊடல், உணர்வுகள் நிகழும் என்றும், தலைவனால் பின்வதுவை செய்யப்பெற்ற மனைவியர்க்கும் பரத்தையர்க்ம் இப்புலவி முதலாயின் உண்டென்றும் கொள்ளுதல் வேண்டும். இவை நிகழும் நேரும் கூற்றுகளின் விகற்பங்களையெல்லாம் இங்கு கூறினால் அவை மிகவும் விரிவாகத் தோன்றும். ஆகையால் இங்கு இக்கட்டுரையில் இல்லறவொழுக்கம் பற்றியச் செய்திகள் எவ்வளவு கூற முடியுமோ அந்த அளவுக் இடம் பெற்றுள்ளன. இச்செய்திகளை பற்றியும், தலைவன், தலைவி முதலியோரின் கூற்றுகளின் நூற்பாக்களாலும், பண்டைய அகப்பொருள் இலக்கியங்களாலும், பிற்காலத்தில் எழுந்த கோவை முதலிய நூல்களாலும் தெரிந்துக் கொள்ளலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம். செய்யுளியல், நூ.179
2. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.44
3. தொல்காப்பியம். பொருளியல், நூ.51
4. தொல்காப்பியம். நூ.5
5. தொல்காப்பியம். நூ.6
6. தொல்காப்பியம். நூ.53
7. மருதக்கலி. பா.5
8. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.11

9. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.21
10. குறுந்தொகை. பா.101
11. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ. 53
12. குறுந்தொகை. பா.40
13. குறுந்தொகை. பா.35
14. குறுந்தொகை. பா.60
15. குறுந்தொகை. பா. 167
16. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.85
17. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.56
18. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ 44
19. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.25
20. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.32
21. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.68
22. தொல்காப்பியம். அகத்திணை,களவியல், நூ.15
23. திருக்குறள்.1109
24. திருக்குறள்.1306
25. திருக்குறள்.1321
26. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.52
27. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.37
28. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.22
29. கலித்தொகை.22
30. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.24
31. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.38
32. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.19
33. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.20
34. தொல்காப்பியம். பொருளியல்.நூ. 31
35. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.6
36. தொல்காப்பியம். பொருளியல்.நூ.32
37. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.15
38. இறையனார் களவியல். நூ.50

39. திருக்குறள்.1303
40. முத்தொள்ளாயிரம்.10
41. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.17
42. தொல்காப்பியம். பொருளியல்.நூ.18
43. திருக்குறள்.93
44. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.14
45. திருக்குறள்.295
46. திருக்குறள்.52
47. திருக்குறள். 1302
48. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.32
49. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.39
50. இறையனார் களவியல்.நூ.52
51. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.50
52. பட்டினப்பாலை.பா.39
53. சிலப்பதிகாரம்.பா.59-62
54. கலித்தொகை.பா.26
55. திருக்குறள்.1147
56. திருக்குறள்.1148
57. இறையனார் களவியல். நூ.43
58. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.28
59. இறையனார் களவியல். நூ.43
60. திருக்கோவையார்.163
61. மேலது, 205
62. மேலது, 206
63. தொல்காப்பியம். அகத்திணை,கற்பியல், நூ.43
64. மேலது,126

**துணைநூற்பட்டியல்**

[1]. அருணாச்சலம் பிள்ளை. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், மதுரைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, மதுரை.1975.

[2]. இராகவய்யங்கார் மு.தொல்காப்பியபொருளதிகார ஆராய்ச்சி, சாரதா பதிப்பகம் சென்னை.

[3]. இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட் சென்னை.

[4]. இலக்குவனார் மு. தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை.1961

[5]. இறையனார் களவியல் உரை, கழக வெளியீடு, சென்னை, 1976

[6]. இராகவையங்கார் இரா, குறுந்தொகை விளக்கம், சாரதா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு - 2016.

[7]. இராகவையங்கார் இரா, பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலை நகர்,1951

[8]. கதிர்முருகு, முத்தொள்ளாயிரம், சாரதா பதிப்பகம், சென்னை.

[9]. திருகூடசுந்தரம், சிலப்பதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1967.

[10]. திருவள்ளுவர். *திருக்குறள்,* பரிலேழகர் உரை, கழக வெளியீடு சென்னை.

[11]. மாணிக்கவாசகர். *திருக்கோவையார்,* கழகவெளியீடு, சென்னை.

[12]. விசுவநாதன் முனைவர், கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை